கேரள மாநிலம் வருகை தரும்

# துணை முதல்வருக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு!

## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் வேண்டுகோள்!



திருவனந்தபுரம், நவ. 2-

கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மாநில இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு அரசின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (2.11.2024 சனிக் கிழமை) காலை 10 மணியளவில் தனி விமானம் மூலம் கோழிக்கோடு கருப்பூர் விமான நிலையம் வருகிறார். அன்று முற்பகல் கோழிக்கோடு கடற்கரை அருகில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மதியம் 2 மணியளவில் கோழிக்கோடு கருப்பூர் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு சென்னை சென்றடைகிறார். தமிழ்நாடு அரசின் துணை முதல்வராக பதவி ஏற்ற பின் முதல் முறையாக கேரள மாநிலம் வரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கேரள மாநில தி.மு.க. சார்பில் மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் (எனது) தலைமையில் மாநில இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரிகுமார் மற்றும் சிற்றார் ரவிச்சந்திரன், மாவட்ட கழக செயலாளர்கள் போபன்.கே.பேபி, சாஜிதா,பூவாது, அனீஷ் ,ஜாபர், முஜிபுர் ரகுமான், ரெஜிராஜ், ஆதவன், சதாசிவம், இலியாஸ், மன்னன் ஆகியோர் முன்னிலையில் காலை விமான நிலையம் வரும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

நெல்லை – பாளை. தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம் –

# நெல்லை மாநகரக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு. சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை.நவ.2-

நெல்லை மாநகர தி.மு.க சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் நெல்லை சட்டமன்றத் தொகுதி, பாளை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம் வருகிற 04112024 திங்கட்கிழமை அன்று தச்சநல்லூர் ஜி.வி.மகாலில் வைத்து நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் தலைமையில் நடைபெறுகிறது. என நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மாநகர தி.மு.க.செயல் வீரர்கள் கூட்டம் நெல்லை தொகுதி பார்வையாளர்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் ச.முத்துச்செல்வி,

பாளை தொகுதி பார்வையாளர்,மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் வசந்தம் ஜெயக்குமார் ஆகியோரின் அறிமுக கூட்டம் வருகிற 4ம் தேதி (திங்கட்கிழமை)அன்று மாலை 5 மணி அளவில் தச்சை ஜி.வி.மகாலில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில்

பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் (தச்சை)நமச்சிவாயம்(நெல்லை) அன்டன் செல்லத்துரை(பாளை) சாகுல் ஹமீது (மேலப்பாளையம்)மாநகர துணைச் செயலாளர்கள் அப்துல் கையூம்,சுதா மூர்த்தி, பாலமுருகன் என்ற பிரபு,மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை நடைபெறுகிறது.

ஆகவே மாநகர கழக, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,கழக மாமன்ற உறுப்பினர் கள்,மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள்,மாநகர கழக சொந்தங்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் 48 வது பிறந்த நாளை நெல்லை மாநகர தி.மு.க சார்பில் வெகு சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாக.

நெல்லை மற்றும் பாளை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள்அறிமுககூட்டம்.

BLA2 நேரடியாக ஆய்வு செய்யும் வழிமுறைகள் விளக்கக் கூட்டம்.

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் வருகிற (06.11.2024 - புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் அச்சரப்பாக்கம் ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள, எஸ்.ஜெ.எம். மஹாலில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.வி.கோகுல கண்ணன், க.செல்வம் எம்.பி., திருமதி.கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர், சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் சூர்யா வெற்றி கொண்டான் (உத்திரமேரூர்), ப.அருண்குமார் (காஞ்சிபுரம்), எம்.டி.ஆர். சாரதிமணி மாறன் (மதுராந்தகம்) எஸ்.டி.இசை (செய்யூர்) ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள் - கழக அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. நவ.27, கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா.

2. வாக்காளர் பட்டியல் சேர்த்தல் - நீக்கல் - திருத்தல்.

3. பி.எல்.ஏ. 2, பி.எல்.சி. சரிபார்த்தல்.

4. கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி.என். பாபு (எ) இளவழகன்

**நவம்பர் 2 (2003)**



**நீதிக்கட்சியைத் தொடர்ந்து கழகத்தில் பணியாற்றிய தனது தந்தையின் வழியொட்டி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**1979 முதல் 2003 வரை திருவண்ணாமலை நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 24 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**1986 முதல் 1990 வரை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கற்பகம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை தலைவராகவும், திருவண்ணாமலை நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக 48 நாட்களும்; 1986ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் பங்கேற்று 45 நாட்கள் சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

உப்பளத் தொழிலாளர்களின்

# குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரண நிதி!

சென்னை, நவ.2-

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள உப்பளத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மழைக்காலமான அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு நிவாரண நிதி இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கி வருகிறது. இதுவரை 21,282 குடும்பங்களுக்கு ரூ.10.64 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2024-ஆம் ஆண்டிற்கான மழைக்கால நிவாரண நிதியானது உப்பளத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் படி தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவாரூர், திருநெல்வேலி, விழுப்புரம், இராமநாதபுரம், செங்கல்பட்டு, கன்னியாகுமரி ஆகிய மாவட்டத்தைச் சார்ந்த 11,329 உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 30.10.2024 அன்று அந்தந்த உப்பளத் தொழிலாளர்களின் வங்கி கணக்கிற்கு தலா ரூ..5000/- வீதம் ரூ.5,66,45,000/- (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து ஆறு இலட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

---

# களமும் காலமும்

## 'கணையாழி' தலையங்கம்!

காலத்தையே மாற்றியவர்கள்
களத்தில் நிற்கிறார்கள்
என்பது அறியாமல்
காலம் மாறியிருப்பதாகக்
களத்தில் குதிக்கிறார்கள்!

ஆட்சிக்கு வந்து விடுவதாக
வலை வீசுகிறார்கள்!
நம்பிக்கை தூண்டிலைப்
போட்டுப் பார்க்கிறார்கள்!

நம்பிக்கை
வாழ்க்கையின் அர்த்தத்திற்குத்
திசை காட்ட வேண்டும்!
பயணிக்க வழி காட்ட வேண்டும்!
தடைகளை உடைக்க
திறன் சேர்க்க வேண்டும்!
கனவு இலக்கைக் கண்டடையக்
கலங்கரை விளக்காக வேண்டும்!
அதனால்
நம்பிக்கைகள் எல்லாம்
மக்கள் சார்ந்து இருக்க வேண்டும்!
இருக்கிற
சாதி நம்பிக்கையில்
வேற்றுமை குறைய வேண்டும்!
மத நம்பிக்கையில்
பகைமை அழிய வேண்டும்!

பொதுமக்கள் வந்து பார்க்கும்
அதிகாரிகளே
சாதி அடையாளங்களை
அலுவலகப் பெயர்ப் பலகையில்
போட்டுக் கொள்வதும்
அலுவலக மேசையிலேயே
சாதி மதப் படங்களை வைத்து
வழிபாடு செய்வதும்
சாதி அடையாளக் கயிறுகளில்
கைகளைக் கட்டிக் கொள்வதும்
நெற்றிகளைத்
தனிப்பட்ட நம்பிக்கையின்
விளம்பரத் தட்டிகள் ஆக்குவதும்
நல்லிணக்க வாழ்வுக்கு
வழிகாட்டக் கூடுமோ?

தனி மனித நம்பிக்கை
மனம் சார்ந்தது; ஆதாரம் தேடாதது!
ஆனால்
மக்களை ஒன்றிணைக்கும்
பொது நம்பிக்கைக்குக்
கொள்கையே அடித்தளமாகும்!

கொள்கைதான்
நம்மைச் சுற்றியுள்ள
களச் சூழலைப் புரிய வைக்கும்!
காலப் புரிதலை மாற்றி அமைக்கும்!
காலப் புரிதல் இல்லாமல்
வரும் காலக்
களத்தை மாற்ற இயலாது!

களத்தை மாற்றிக்
காலத்தையும் மாற்றியவர்கள்
வரலாற்றுக் காலத்தில் மட்டுமில்லாமல்
வரும் காலத்திலும்
கொள்கையில்

வாழ்ந்து கொண்டே இருப்பார்கள்!
கொள்கை இல்லையேல்
கூட்டத்தில் பயனில்லை!
கொள்கைதான் அடையாளம்!

கடந்தகால அடையாள வேடங்களில்
நிகழ்காலத்தை
ஏமாற்றும் முயற்சிகள்
குடுகுடுப்பையின் நம்பிக்கை!

“நல்ல காலம் பொறக்குது” எனும்
குடுகுடுப்பை நம்பிக்கையில்
சொல்பவர் பைதான்
உடனே நிறைகிறது!
கேட்பவருக்கு நல்ல காலம்
என்பதைவிட
சொல்பவரின் நல்ல காலம்தான்
குடுகுடுப்பையின்
நோக்கமாக இருக்கிறது!


வரும் பொதுத் தேர்தலில்
ஆளும் தி.மு.க.
ஆட்சிக்கு வர முடியாது என்று
ஆரூடம் சொல்கிறவர்களை
அரசியல் சோதிடர்கள் என்று
தமிழ்நாடு முதலமைச்சர்
சொன்னார் என்றதும்
எதிர்க் கட்சித் தலைவர்
ஆமாம்!
சோதிடம்தான் சொல்கிறேன்
ஆட்சிக்கு வரமுடியாது என்று
அறைகூவல் விடுகிறார்.

இப்படித்தான்
ஸ்டாலின் இனி முதல்வராகவே முடியாது என்று
ஏப்ரல் 2018 இல்
விஜயகாந்த் பேசினார்!

இப்படித்தான்
ஓட்டப்பிடாரத்தில்
ஓ.பி.எஸ். மே, 2019 இல் பேசினார்!
தி.மு.க., தலைவர் ஸ்டாலின்,
கனவில் கூட
எக்காலத்திலும் முதல்வராக முடியாது என
பிப்ரவரி 2021 இல் மதுரையில்
அப்போதைய தமிழக பா.ஜ., தலைவர்
முருகன் பேசினார்.

சேலம் மாவட்டம்
ஓமலூர் சட்டமன்றத் தொகுதிப்
பிரச்சாரக் கூட்டத்தில்
ஏப்ரல் 2021 இல்
எந்த காலத்திலும் ஸ்டாலின்
முதல்வராக முடியாது
என்று பேசினார்
எடப்பாடி பழனிசாமி.
அரசியல் சோதிடர்களை முறியடித்து
ஆட்சியில் இருக்கிறார்
தமிழ்நாடு முதலமைச்சர்!

சாதி அடையாளம் காட்டும்
கயிறுகளை அவிழ்க்க
நீதிநாயகம் சந்துரு அறிக்கை,
பள்ளி மாணவர் பசி போக்கக்
காலைச் சிற்றுண்டி
ஆண் பெண் வேறுபாடின்றிக்
கல்லூரி மாணவர் உதவித் தொகை என்று
காலத்தை மாற்றக்
களத்தை
மாற்றிக் கொண்டிருக்கிறார்
தமிழ்நாடு முதலமைச்சர்!



-நன்றி
'கணையாழி'
நவம்பர் - 2024

ம.ரா.